# அழகிய
# மாற்றங்களின்
# ஆரம்பம்

ஹியூமேன் அபிமானி
HUMANE ABIMANI

**AVINI Publications**
# 60, Rajagopalasamy Nagar
Post Box No : 46
Mannargudi, Tamilnadu - 614 001
**Mobile : 98941 92072**
email : avinipublications@hotmail.com

© All rights reserved with the Author
First Edition - March 2007

**Price Rs. 60/-**

இந்நூலாசிரியரின் தனி சுய ஆராய்ச்சியில் உருவாகியுள்ள இந்நூலின் எப்பகுதியையும் எவரும் வெளியிடுவது, மொழிபெயர்ப்பு செய்வது, நகல் எடுப்பது, பதிவு செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. மீறுபவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும்.

Printed at : Sri Janakiraman Offset Printers
# 69, Mir Bakshi Ali St, Royapettah, Chennai - 14.
tel : 28482612 / 43567512.

# முன்னுரை

இயன்ற அளவிற்கு மிகப்பலரது கவனங்களை ஈர்த்து, நன்மாற்றங்கள், திட்டங்களைச் செயலாக்கிட இந்நூலாசிரியர் தன் எண்ணங்கள், ஆய்வுகளில் சிலவற்றை எடுத்து வழங்குவதற்கு இந்நூலின் வழியாக முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இன்றைய மற்றும் பின்னாளைய சமுதாயங்கள் நீடித்த, நிலையான, அவசியமான உபயோகங்கள் மற்றும் பயன்களைப் பெறவேண்டும் என்ற ஆழமானக் கருவைக்கொண்டு ஆழ்ந்ததில் நல்ல விளைச்சலுடன் கிடைத்தவைகள் இங்கு தொடுக்கப்பட்டுள்ளன. இங்கு கூறப் பட்டுள்ளவைகளில் பலவும் சுய மற்றும் சுற்றுப்புற அனுபவங்களில் நிரூபனம் செய்யப்பட்டவைகளாகியதோடு மட்டுமன்றி கருத்துக் கேட்புகள் மற்றும் கலந்தாலோசித்தல்களில் பலரின் மிகுந்த விருப்பத்திற்கு உட்பட்டவைகளாகவும் விளங்குகின்றன.

இந்நூலாசிரியரின் மிகுந்த விருப்பத்திற்குரிய இன்றைய, நாளைய அனைத்து நூல்கள், கண்டுபிடிப்புகள் முழுவதின் முழு சமர்ப்பணங்களுக்கும் மிக உரித்தாகியவர்களான, ஆயிரமாயிரம் கோடி மனிதப்பிறவிகளில் மிகச்சிலராய் அவ்வப்போது அவதரித்து, அடிப்படைகள் அனைத்தையும் வழங்கிய வணக்கங்களுக்குரிய, இயல்பான இயற்கையான மகா விஞ்ஞானிகள் – தத்துவஞானி களாகிய, சுயநலமற்று உலக நலனைக் கருதிய மகா–மனிதாபி மானிகளால்தான், பின்வருமாறு அனைத்தும் நடந்தன.

இவர்களால்தான் விலங்குகளோடு விலங்குகளாய் விலங்குகளின் அத்தனை குணம், பழக்க வழக்கங்களுடன் காடுகளில் ஊளையிட்டுச் சுற்றித்திரிந்து, பச்சை நரமாமிசம் உண்டு, பொந்துகள்,

இடுக்குகள், குகைகளில் ஒதுங்கி, ஒளிந்து வாழ்ந்துவந்த ஆரம்பகால அம்மண மனிதர்கள் மெல்லமெல்ல மாற்றங்களைப்பெற்று அறிவு, குணம், கொள்கைகள், இன்னபிற இத்யாதிகளிலும் உருமாற்றம் அடைந்து இன்றைய நிலைத் தோற்றங்களில் இத்தனை வசதிகளுடன் இயங்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இன்று உலகம் முழுவதும் இம்மேதைகளையும் இவர்களின் இனங்களையும் மறந்து புறந்தள்ளி, பொழுதுபோக்குத்துறை, பொல்லாங்குத்துறைகளின் கூத்தாடிகளுக்கு பிரம்மாண்டவிழாக்கள் எடுத்து கொண்டாடப்படுகின்றன.

அன்றிலிருந்து இன்று வரையிலும், இடைப்பட்டக் காலத்தில் பலகால அளவு நிலைகளில் வாழ்ந்த மனிதர்கள், அவர்களின் அவ்வப்போதைய வாழ்க்கை வழிமுறைகளையே அதிகபட்ச சரியான, பொருத்தமான, உயர்ந்த வளர்ச்சி பெற்ற நிலைகளாக எண்ணி வாழ்ந்து போயிருக்கக்கூடும். அவ்வாறே இன்றைய நிலைகளை இக்கால மனிதர்களில் பெரும்பான்மையோர் முடிவாகக் கருதிக்கொண்டிருக்கும் நிலை நிலவுகிறது. ஆனால் உண்மையில் இது தவறானது; ஏனெனில் மாற்றங்களுக்கு உட்பட்டதுதானே மனித வாழ்வியல் தத்துவம்!

எல்லாக்காலக்கட்டங்களிலும் முழுமைப் பெறாத குறைபாடுடைய பல நடைமுறைகள் தவிர்க்க முடியாததாக இன்றுவரையில் இருந்துவருவது வருத்தமளிக்கிறது. ஏனோ எல்லா மனிதர்கள் மற்றும் அனைத்து நிகழ்வுகளும் மிகச்சரியான நிலைகளில் இருந்துவிடக்கூடாது என்கிறபோக்கில் இயற்கை உலகம் இயங்கி வருகிறது. இருப்பினும் இயன்ற வரையில் அவசிய நன்மாற்றங்களுக்காக முட்டிமோதிப் பார்த்துவிடலாம் எனத் தோன்றுகிறது. துரதிருஷ்டவசமாக இன்றைய மனிதர்கள் அவற்றில் அனைத்தையுமோ அல்லது சிலவற்றையோகூட ஏற்காவிட்டாலும் நிச்சயம் பின்னாளைய மனிதர்களால் இவைகள் ஏற்கப்படலாம் என்ற

நம்பிக்கை தைரியமளிக்கிறது. பல புதிய உலக வரவுகள் உருவாகிய நாட்களில் புறக்கணிக்கப்பட்டு பின்னாளில் மிகப் போற்றப்பட்டு, மிக உகந்த நடைமுறையாகிப்போய் அவை சர்வசாதாரண வாழ்க்கை முறையாகிப்போன வரலாறுகள் பல உண்டு.

உலகத்தின் பல நாடுகளின் மொத்த மக்களுடன், அரைகுறை அரைவேக்காட்டு அறிஞர்கள் மற்றும் அரசர்களும் பூமியைத் தவறாக தட்டை, சதுரம், சமதளம் என உறுதியாகக் கருதியபோது, தனி ஒருவராக நின்று பூமி உருண்டை என்ற உண்மையைக் கூறியதற்காக, மகாவிஞ்ஞானி ஒருவரை கொடும் சித்திரவதைகள் செய்து கொலை செய்தது இந்த உலகத்தில்தான் நடந்தேறியது. மனிதர்களை குறிப்பாக இளைஞர்களை, எதையும் ஏன், எப்படி, என்று கேள்வி கேட்டு காரணவிளக்கம் அறியக் கூறியதற்காக மாமேதை சாக்ரடீஸ் மக்கள் பலரின் ஆதரவுடன் ஆட்சியாளர்களால் மாமன்றத்தில் விஷம் குடிக்கச்செய்து கொல்லப்பட்டது அனைவரும் அறிந்ததே.

ஒவ்வொரு காலத்திலும் அதுவரையில் இல்லாத சில புதிய முறைகள், கருத்துக்கள், கருவிகள் புதிதாக உருவாக்கப்படுகின்றன. பின்னர் அவைகளில் சிலவற்றை ஏற்காவிட்டாலும் அதிகபட்சமானவைகள் அங்கீகரிக்கப்பட்டு வழக்கத்தில் வந்து வெகுவிரைவில் மிகச்சாதாரண நடைமுறையாகிவிடுகின்றன. இவற்றில் நல்லவைகளோடு தீயவைகளும் அதிகமாக வலுவாக இடம் பிடித்துவிடுகின்றன. தேவையற்றவைகள், தீயவைகளுடன் கோமாளித்தனங்களும் கூத்தாடுவது முன்னெப்போதையும்விட இக்காலத்தில் விசுவரூபமெடுத்திருப்பது எங்கு கொண்டுபோய்விடுமோ தெரியவில்லை !

இன்றைய நிலையிலும் இதுவரையில் (அவ்வளவில்) இல்லாத அவசியத்தேவைகளுக்கான சில சூட்சமங்கள் இனிமேல் வரலாம்,

வந்து கொண்டிருக்கலாம். அவ்வகையினில் சிலச் செயல்களைச் சொல்வதற்கு சிறிதளவிலாவது இந்நூல் உதவியிருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படுமாயின் இது ஆக்கப்பட்டதற்கான முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கப்பெற்றதாகக் கருதி மகிழ்ச்சி கொள்ள இயலும்.

இதுவரையில் பெரிய அடையாளம் இல்லை என்கிற ஒரே காரணத்திற்காக மட்டும் எவரையும் புறக்கணித்துவிட வேண்டாமென மன்றாடப்படுகிறது. எம்மூலையிலிருந்தும் நன்மாற்றங்களுக்கான வித்துகள் வரலாம் என்பது உலக அனுபவம். இந்நூலில் கூறப்பட்டிருக்கும் திட்டங்கள், கருத்துக்கள் இறுதியானவை என்பதாக ஆசிரியர் உரிமை கொண்டாடவில்லை. ஆன்றோர், சான்றோர்களின் பரிசீலனைகள், மேம்பாட்டு மாற்றங்களுக்கு உட்பட்டவைகள், அவை வரவேற்புக்குரியவை என்பதையும் கவனத்துடன் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

நன்றியறிதலை தெரிவிக்கும் முகமாக, இந்நூல் மற்றும் இதன் ஏககால வெளியீடுகளான 'கோணல்களில் கூனல்கள்', 'நனவுப்பருவம்' ஆகிய முக்கூட்டு நூல்களின் உருவாக்கத்திற்கு உதவியவர்களை நினைவு கூர்வது பொறுப்பு மிக்க கடமையாகிறது. நிறைவாகச் சொல்வதற்கு நிறைய இடம் தேவைப்படும் என்கிற இயலாத நிலையில் மிகக்குறைவாகக் கூறுவதால் அவர்களின் பங்கு குறைவானதன்று. அப்பெருந்தகையினருள் தாயார் திருமதி.வைரம்ராமசாமி அவர்கள், புலவர்.திரு.இராசு அவர்கள், பேராசிரியர் டாக்டர் திரு.எஸ்.காத்தமுத்து அவர்கள், மன்னார்குடி எஸ்.டி.ஆர். பிரிண்டர்ஸ், திரு.எஸ்.ரவி அவர்கள், நாகை நண்பர் திரு.ஹெச். சுல்தான் முகைதீன் அவர்கள் ஆகியோருடன் மற்றவர்களின் உதவிகளும் உயர்வு பெற்றவை.

உலகலாவிய ஒப்புநோக்கலினால், இந்நூலில் நிச்சய நன்முறைகள் நிறைய இருக்கும் என்பதில் வலிமையான உறுதி

மேலிடுகிற நிலையில், ஆளுமையுடையவர்களுடன், அறிவுசார்ந்த வாசகர்களின் வரவேற்பும், ஆதரவும், நூலாசிரியருக்கு ஊக்கம் கொடுத்து மேலும் சிறந்த எழுத்துக்கள், கண்டுபிடிப்புகள், சேவைகள் செய்வதற்கு ஊக்குவிப்பாக இருக்கும் என்பதை தெரிவித்து நன்றியுடன் இந்நூல் சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்நூலில் வந்தவைகள் ஒரு சிறு ஆரம்பமாக இருக்கட்டும். வெகுவிரைவில் இவற்றைவிடப் பன்மடங்கு வீரியச்சிறப்பு மிகுந்த வரவுகளுக்காக உறுதியான நம்பிக்கையுடன் தைரியமாகக் காத்திருப்போம்.

**ஆசிரியர்**

குறிப்பு : இந்நூலின் கருத்துக்கள் அனைத்துத் தரப்பு வாசகர்களையும் எளிதாகச் சென்றடையவேண்டும் என்ற நோக்கில் இங்கு பேச்சுவழக்கு மொழிநடை பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, இருக்கின்றனர், கூறுகின்றனர் என்பதற்குப் பதிலாக முறையே இருக்கிறார்கள் எனவும், கூறப்படுகிறது என்பதற்கு சொல்லப்படுகிறது எனவும், அத்துடன் பிறமொழி சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

# உட்கருக்கள்

பக்கம்

## சீர்மிகு மாற்றங்களுக்காக

1. உலகினில் இனியில்லை தண்ணீர் பஞ்சம் 1
2. தமிழ்மொழி எழுத்துச் சீர்திருத்தம் 10
3. தரைவழி போக்குவரத்து 40

## சுற்றுச்சூழல் பராமரிப்பிற்கு புதுமைகள்

1. கட்டாயச் சுற்றுச்சூழல் திட்டம் 74
2. குப்பைகளை கையாளுதல் 82
3. புதியவகை பொது குப்பைத்தொட்டி 85
4. பாலித்தீனை இப்படி கையாளுவோம் 91
5. கையில் கொண்டுசெல்லும் கழிவறை 99
6. கிராமப்புற செலவில்லா கழிப்பறைத் திட்டம் 108
7. சிறுநீர் உரம் 112
8. சாக்கடைகளில் மாற்றம் 118
9. இரயில் பயணிகள் பெட்டியில் கழிப்பறை உபயோகம் 123

## கிராமப்புற முன்னேற்றங்கள்

1. 12 மாதங்களிலேயே பணக்கார நாடாகலாம் இந்தியா 131
2. கிராமங்களில் வளர்ச்சி 139
3. கிராமிய முன்னேற்றம் 143

## நகரங்களில் புதிய பொதுநலத் திட்டங்கள்

1. நகரங்களில் மிகக்குறைந்தக் கட்டண தங்குமிடங்கள் 152
2. நகரங்களில் குடிசைகள் முழுவதும் நீக்கம் 158
3. வெளிஇடங்களில் சாமான்கள் வைக்கும் பெட்டகவசதி 166
4. பொது இடங்களில் விளம்பரப் பலகைகள் 168

## தவிர்க்கக் கூடாதக் கட்டாயங்கள்


| | | |
|---|---|---|
| 1. | லஞ்சமில்லா பஞ்சஊழல் ஒழிப்பு | 171 |
| 2. | வாக்களிப்பதை கட்டாயமாக்கிக் கொள்வோம் | 182 |
| 3. | கல்விக் கொள்கையில் மாற்றங்கள் | 190 |
| 4. | வேலைவாய்ப்புக் கல்வி | 197 |
| 5. | எப்போதும் அரசு உத்தியோகங்களா | 200 |
| 6. | மின் சிக்கனம் | 206 |


## உலக நோக்கில்


| | | |
|---|---|---|
| 1. | ஆடை வரைமுறைகள் | 208 |
| 2. | இப்படி ஓர் உலக அதிசயம் உருவானால்! | 220 |
| 3. | தனிமனிதனும் இயற்கைச் சீற்றங்களும் | 232 |


## நளினமிகு ஆலோசனைகள்


| | | |
|---|---|---|
| 1. | நவீன சுயம்வரம் | 245 |
| 2. | அரசியல் | 255 |
| 3. | தங்கத்திலிருந்து மாற்றம் | 272 |
| 4. | நிமிடத்திற்குள் வீட்டில் பூமாலை | 283 |
| 5. | வழக்குகள் விரைவாய் தீர்வதற்கு | 288 |
| 6. | வசிப்பிடங்களை இயற்கையாகக் குளிர்ச்சியாக்குதல் | 292 |
| 7. | கட்டிடங்களின் கட்டுமானச் செலவை குறைப்போம் | 297 |
| 8. | அழிவில்லாச் செல்வங்கள் | 302 |
| 9. | இந்தியாவில் ஆங்கிலம் | 311 |
| 10. | புதியமுறை நீர்மின் விசையுடன் வறண்ட பகுதிகளுக்கு நீரைத் திருப்புதல் | 335 |

## சிறப்பு முன்னோட்டம்

இந்நூலின் மூலமாக முதன்முறையாக தெரிவிக்கப்பட்டுள்ள புதிய கண்டுபிடிப்புகள், திட்டங்கள், செயல்பாடுகள் அவற்றின் குறுவிளக்கங்கள் பற்றிய எளிதான முன் தகவல் அறிக்கை

**புதிய கண்டுபிடிப்புகள் / திட்டங்கள்**
**அவற்றின் செயல்பாடுகள் / விளக்கங்கள்**

### *1) நன்னீர் பஞ்சத்திற்கு நிரந்தரத் தீர்வு*

i) வறண்ட ஆறுகளில், சுமார் பாதி உயரத்திற்கு, கிட்டத்தட்ட ஒரு கி.மீ.க்கு ஒன்று என நிரந்தர தடுப்புச் சுவர்கள் உண்டாக்கி மழை நீரை சேமித்து பயன்படுத்துதல்

ii) இதனால் மனிதர்களுக்கு பல நன்மைகளுடன், இயற்கைக்கும் சில நன்மைகள் உண்டாகின்றன; உலகம் முழுவதும் பஞ்சம், பட்டினி நீக்கம்

### *2) முப்பத்தொரு எழுத்துக்களில் தமிழ்மொழி*

i) உயிரெழுத்து – 12, மெய்யெழுத்து – 18,

ii) ஆயுத எழுத்து – 1, ஆகிய 31 எழுத்துக்கள் மட்டுமே அடிப்படைத் தேவை

உயிர்மெய்யெழுத்துக்கள் அனைத்தும் ஒரேமுறையில் உருவாகும் உதவி எழுத்துகளாகின்றன. உயிர் மெய்யெழுத் துக்களை தனியாகக் கற்க வேண்டிய அவசியமில்லை.

### *3) இருபது எழுத்துக்களில் தமிழ்மொழி*

i) '**அ**' வை மட்டும் அடிப்படை உயிரெழுத்தாகக் கொண்டு, இணைப்புக்குறிகள் மட்டும் சேர்க்கப்பட்டு மற்ற உயிரெழுத்துக்கள் உருவாகின்றன.

***உயிரெழுத்து – 1, மெய்யெழுத்துக்கள் –18, ஆயுத எழுத்து – 1, மொத்தம் = 20.***

2) உயிர்மெய் எழுத்துக்கள், அவற்றின் பெயருக்கு சரியான அர்த்தம் சேர்க்கும் விதமாக, மெய்யெழுத்துகளுடன், உயிரெழுத்துக்களின் ஒலிகளுக்காக, புதிய முறையில் உண்டாக்கப்பட்ட அவற்றின் இணைப்புக் குறிகள் சேர்க்கப்பட்டு உருவாகின்றன. இங்கேயும் உயிர்மெய் எழுத்துக்களை தனியாகக் கற்க வேண்டிய அவசியமில்லை.

### 4) *அனைத்து (மொழி) ஒலிகளுக்கும் தமிழில் எழுத்துக்கள்*

1. தனியாக புதிய வகை எழுத்துக்கள் சேர்க்காமல், க, ச, ட, த, ப ஆகிய மெல்லின எழுத்துக்களுடன், இரண்டு இணைப்புக் குறிகள் மூலம் 130 புதிய ஒலிவடிவ எழுத்துக்கள் உருவாகின்றன.

   தற்போதுள்ள முறையில் ஒலி மற்றும் அதனை சேர்த்து உருவாகும் ‘கௌ முதல் னொ’ வரை 18 உயிர் மெய் எழுத்துக்களுக்கு, ‘ள’ என்ற தனி ஒலி வடிவ எழுத்தை பக்கத்தில் போடாமல் ஒரு சிறிய இணைப்புக்குறி மட்டும் சேர்க்கப்படுகிறது.

### 5) *சாலைகளை நேராக்குதல்*

i) நிலத்தை கையகப்படுத்தும் வழிகள்.

ii) எதிரெதிரே இடம், மற்றும் மண்ணை மாற்றுதல்.

iii) இயந்திரங்களை சிறப்பாக பயன்படுத்தும் ஒருமுறை

### 6) *மரங்கள் வெட்டுவது, வளர்ப்பது*

i) இத்திட்டத்தில், மரங்கள் வெட்டப்படுமாதலால், அதை பயன்படுத்துதல்.

ii) பின் புதிதாக உண்டாகும் சாலையோரப் பகுதிகளில் மரக்கன்றுகள் நட்டு வளர்த்தல்

### *7) சாலைபாலங்கள் அகலமாக்குதல்*

i) செங்கோண முக்கோண இணைப்புகளை பழைய மற்றும் குறுகிய திருப்பங்களிலுள்ள பாலங்களின் இருபுறமும் இணைத்து, இயன்ற அளவில் பாலங்களை சாலைகளுக்கு நேர் வருமாறு செய்தல்.

ii) ஒரு பக்க இணைப்பு முறையில் அனைத்து சாலைகளுக்கு நேராகவுள்ள குறுகிய பாலங்களை அகலமாக்குதல்

### *8) மின், தொலைபேசி கம்பங்கள் இடமாற்றம்*

i) ஒரு நூறு கம்பங்களை வைத்து நாடு பூராவும் உள்ள கம்பங்களை சாலையோரத்திற்கு நகர்த்துதல்.

### *9) சாலை குறுக்கே மற்றும் சந்திப்புகளில், நடை மேம்பாலங்கள்*

i) இதை அரசியல்வாதிகளை வைத்து நிறுவுவதற்கு வாய்ப்புகள்.

ii) சுரங்க பாதைகளை விட, சிறப்புப் பயன்கள் பலவற்றை தெரிவிக்கப்பட்டுள்ளது.

iii) சாலைகள், மேம்பாலங்கள் மூலமாக மட்டுமே சாலையை கடக்க முடியுமெனில் அனாவசியமாக பலர் அடிக்கடி வெளியில் வருவது குறையும்.

iv)) சிலருக்கு இச்சிரமம் காரணமாக பல வேலைகளை ஒன்றிணைத்து ஒரே தடவையில் செய்யும் வழக்கம் கூடும். இதனால் வெளியிடங்களில் கூட்டம் குறையும்.

### *10) நகர போக்குவரத்து அபிவிருத்தி*

i) கடை அமைப்புகளில் மாற்றங்கள்

ii) கடைகளுக்கான அளவுகள்

iii) கடையின் வாயிற்பகுதி, சாலை பக்கம் இருத்தல் கூடாது

iv) இரு சக்கர வாகனங்களை நிறுத்த, கடைப்பகுதிகளில் தனி இடங்கள்

v) கடைப்பகுதிகளை மொத்தமாக தனி இடங்களுக்கு மாற்றுதல்

### *11) பேருந்தினுள் அதிக இடம்*

நிற்கும் பயணிகள் கூட்டத்தை சமாளிக்க, நகர பேரூந்துகளில் ஒன்றுவிட்டு ஒரு உட்காரும் சீட்டை நீக்குதல்

### *12) மோட்டார் சைக்கிளில் மூன்று பேர் அனுமதி*

உட்காரும் இருக்கையை பின்புறம், அளவு மீறாமல், சற்று நீட்டித்துக் கொள்வது

### *13 கட்டாய சுற்றுச்சூழல் திட்டம்*

i) இளைஞர்களின் நேரம், சக்தி வீணாக்கப்படாமல் பயன்படுத்தப்பட்டு நல்ல குடிமக்களை உருவாக்குதல்

ii) சுமார் ஐம்பது பயன்களை பதினெட்டு எண்ணிக்கைகளில் தரப்பட்டுள்ளது,

iii) மேலும் பத்துக்கும் மேற்பட்ட புதிய செய்திகள் உள்ளன.

### *14 புதிய பொது குப்பைத் தொட்டி*

i) ஒரு தனிப்பொருளாக புதிய கண்டுபிடிப்பு, அதன் வடிவப்படம், உபயோக முறை,

ii) சுற்றுப்புற பராமரிப்பு,

iii) ஒழுங்கு முறை வாழ்க்கை

iv) மக்கள் பொறுப்பு,

v) சுத்திகரிப்புத் தொழிலாளர் பணிநிலை உயர்வு

vi) பொதுமக்களுக்கு சிறிய உடற்பயிற்சி

### *15) பாலித்தீன் குப்பைகளை அழிக்கும் முறை*

i) பூமிக் குழி முறை

ii) சுவர்க்குழி முறை (புதிய முறையில் சுவர் அமைத்தல்)

iii) கழுவி உபயோகித்தல்

iv) பாலித்தீனுக்குப் பதிலாக மற்ற பல பொருள்களை உபயோகிப்பது

### *16) செலவில்லாக் கழிப்பறை*

- i) மனிதக்கழிவுகள் ஒரே இடத்தில் சேர்க்கப்பட்டு எருவாக மாறுதல்.
- ii) கௌரவமாக இயற்கை உபாதை போக்குதல்
- iii) நீடித்த பெரும் பயனைத் தரும் பழ மரங்கள் வளர்ப்பு
- iv) மனிதக் கழிவுகளுக்கு ஒரு பொருளாதாரம்

### *17) கையில் கொண்டு செல்லும் கழிவறை*

1) தனிப்பொருளாக புதிய உருவாக்கம்
2) இரண்டு வடிவங்கள்
3) நிலங்களுக்கு இலவச இயற்கை உரம்
4) வெளியில் தெரியாமல் கழிப்பு
5) கழிவு வீணாகிவிடாமல் உரமாகி பொருளாதார மேன்மை பெறுகிறது.

### *18) சிறுநீரை கையாளும் புதுமுறைகள்*

- i) தூரத்திலிருக்கும் கழிவறைக்குப் போய் அலைய வேண்டியதில்லை
- ii) கழிப்பறை இல்லாத இடங்களில் உபயோகம்
- iii) இலவச இயற்கை உரம் அதனால் பொருளாதார மதிப்பு
- iv) கௌரவ இயற்கை கழிப்பு
- v) சிறுநீரை அடக்கி, கிட்னியில் கல் சேர்ப்பது தடுப்பு.

### *19) இரயில்வே பிளாட்பார பராமரிப்பு உயர்வு*

1) தனி இணைப்புப் பொருள் உருவாக்கம்
2) உயர்ந்த இரயில் நிலைய சுற்றுப்புறப் பராமரிப்பு
3) சுத்திகரிப்புத் தொழிலாளர் பணி சிரமம் குறைப்பு
4) பயணிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி
5) நாற்றம், அருவெருப்பு, நோய் பரவுதல் தடுப்பு

### 20) சாக்கடைகளுக்கு மூடி போடுதல்

i) வெளிகுப்பை சாக்கடைக்குள் போவது தடுப்பு
ii) சாலை அகலமாகிறது
iii) தனி நடைபாதை கிடைத்தல்
iv) சாக்கடைகளின் அவலம் மறைப்பு
v) நாற்றம், விபத்து குறைப்பு.

### 21) விரைவில் பணக்கார நாடாக வழிகள்

i) மாவட்டந்தோறும் கிராமத் தொழிற்சாலைகள்
ii) மக்கள் முதலீடு
iii) அருகில் கிடைக்கும் மூலப்பொருட்கள் பயன்பாடு
iv) உற்பத்திப் பொருட்கள் சுற்றுப்புறத்தில் விற்பனை
v) சுற்றுப்புறத்திலுள்ளவர்களுக்கு மட்டும் வேலை
vi) நகரத்தில் கூட்டம் குறைப்பு
vii) கிராம வளர்ச்சி

### 22) கிராமப்புறக் கல்வி

i) அந்தந்தப் பகுதி மாணவர்கள் அங்குள்ள கிராம பள்ளிகளில் படிப்பது கட்டாயம்
ii) கிராமப்புற மாணவர்களுக்கு உயர்க்கல்வி கூடங்களில் நல்ல இட ஒதுக்கீடு
iii) ஐந்தாண்டிற்கொருமுறை கிராம, நகர ஆசிரியர் இடமாற்றம்

### 23) கிராம முன்னேற்றம்

i) கிராமப்பூங்கா, மகிழ்விடங்கள்
ii) அனைத்து முக்கிய அலுவலகப் பிரிவுகள் அமைத்தல்

### 24) நகரங்களில் குடிசைப் பகுதிகள் முழுவதும் நீக்கம்

i) குறைந்த செலவில் தொகுப்பு வீடுகள் அமைப்பதற்கான ஒரு ஆகாயப்பார்வை தோற்ற அமைப்பு உருவாக்கம்

### 25) ஏழைகளுக்கு வருமானத்துக்கான வாய்ப்புடன் வாழ்விடங்கள்

i) வாழ்வாதாரத்திற்கு, கால்நடை வளர்ப்பு இடத்துடன் தொகுப்பு வீடுகள் அமைப்பதற்கான விளக்கமுறை.

### 26) நகரங்களில் ஏழைகளுக்கான தற்காலிகத் தங்குமிடங்கள்

i) புதிய வாழ்க்கை, கலாச்சார முறைக்கு ஒரு உருவாக்கம்

ii) மக்களின் வாழ்வு மேனிலை

iii) குற்றங்கள் தடுப்பு

iv) சுற்றுப்புறம் அசுத்தமாகாமல் தடுப்பது

### 27) பொது விளம்பரப் பலகைகள்

i) புதிய உருவாக்க முறை

ii) புதிய கலாச்சாரம்

iii) ஒரே இடத்தில் விளம்பரத் தகவல்கள் கிடைப்பது, அதனால் மக்களுக்கு வசதி

iv) சுற்றுப்புற சீர்கேடு, மற்றும் சுவர், போர்டு சண்டைகள் நீக்கப்பெறுதல்

### 28) நகரங்களில் முக்கிய இடங்களில் சாமான்கள் பெட்டக வசதி

i) புதிய உருவாக்கம்

ii) மக்களுக்கு புதிய வசதி, பொருட்களுக்குப் பாதுகாப்பு

### 29) லஞ்சம் ஊழல் ஒழிப்பது

முப்பத்தாறு (36) வழிமுறைகள்

### 30) கட்டாய வாக்களிப்பு

வழிமுறைகள்

### 31) கல்வி முறை மாற்றம்

i) தேவையற்ற பட்டப்படிப்புப் பாடப்பிரிவுகள் குறைத்தல்

ii) சிறுவயதிலிருந்தே தொழிற்கல்வி பற்றியப் பாடங்கள்

iii) பள்ளி ஆசிரியர்கள் தனி வகுப்புகள் நடத்தக்கூடாது.

### 32) வேலைவாய்ப்பு அதிகரிப்பு

i) தம்பதியரில் ஒருவருக்கு மட்டுமே அரசுத்துறை வேலைகள்

ii) பத்தாண்டு கணக்கில் நிறைய ஒப்பந்த ஊழியர்கள், அரசு அலுவலகங்களில் பணி தேக்கம் தவிர்த்தல்

### 33) மின்சார சிக்கனம்

i) மின்விசிறி, விளக்குகள், குளிர்சாதனங்கள், மின்சாரத்தால் இயங்குகிறப் பொருட்கள், தேவையில்லாமல் உபயோகப் படுத்தக் கூடாது. குறைந்த நேரம் மட்டும் பயன்படுத்த வேண்டும்.

### 34) பெட்ரோலியப் பொருட்கள் சிக்கனம்

i) வாகனங்களில் அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கு அதிகம் குறையாமல் பயணம் செய்வது

ii) மோட்டார் சைக்கிளில் மூன்று பேர் அனுமதி

iii) பல வேலைகளுக்கு திட்டமிட்டு ஒரு பயணம்

iv) தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பது

v) உணவுப் பொருட்களுக்கான நல்ல மூலப் பொருட்களை தயார் நிலையில் வைத்துக் கொண்டு சமையலைத் துவங்குவது. தேவைக்கு அதிகமாக வேக வைப்பது சமைப்பது கூடாது.

### 35) ஆடை வரைமுறை

i) உலக அளவில் ஆண், பெண் குறைந்த பட்ச ஆடைகளின் அனுமதி அளவுகள்

ii) ஐ.நா. முடிவு செய்தல்

**36) ஓர் உலக அதிசயத்தை உருவாக்குதல்**

i) ஒரு புதிய அதிசய உருவாக்கம்
ii) உலக அமைதி, ஒருங்கிணைப்புற்கு வழிகள்
iii) பல தனி சிறப்புகள்

**37) தனி மனிதனும் இயற்கை சீற்றங்களும்**

i) தனி மனிதக் காரணங்கள்
ii) தவிர்ப்பதற்கு வழிமுறைகள்
iii) எல்லாக் கால நிலைகளையும் தாங்கும் உணவுப் பயன் தரும் மர வகை உருவாக்கம்

**38 கடல் சீற்றங்கள், சுனாமி போன்றவைகள் பாதுகாப்பு**

நான்கு முறைகள்

**39 நவீன சுயம்வரம்**

i) திருமணங்களை எளிதாக்குவது
ii) ஏமாற்று, பொய்களை தடுப்பது

**40 புதிய முறையில் பூமாலை**

i) வீடுகளில் எளிதாக பூமாலை செய்வது

**41 அரசியலில் புதுமை**

i) தொண்டர் நிதி திட்டம்

**42 வசிப்பிடங்களில் இயற்கை குளிர்ச்சி**

i) சுற்றுப்புற சூழலை உயர்த்துகிற, செலவு குறைந்த முறை

**43 கட்டிட கட்டுமான செலவுகுறைப்பு**

i) சுவர் கட்டுவதற்கு புதியமுறை உபகரணம்

### 44 தங்கக் கொள்கை

i) தனி நபர் வைத்துக் கொள்ள அதிகபட்ச அளவுகள் நிர்ணயம்

ii) பொதுமக்கள் தங்கத்தை, பாங்குகளில் முதலீட்டு பத்திரங்களாக மாற்றுதல், பிற்காலத்தியக் கூடுதல் தொகையுடன் முதலீட்டு மதிப்பு திரும்பக் கொடுத்தல்

iii) நாட்டு பொருளாதாரத்தின் உடனடி உயர்வு, தொழில் பெருக்கம்

iv) தனி நபர்கள், அனுமதிக்கப்பட்டத் தங்கத்திற்கு மேல் வைத்திருந்து, பாதிப்பு, திருட்டு ஏற்படின் நடவடிக்கை கிடையாது, தனி நபரே தண்டனைக்குரியவர்

### 45 செய்தித்தாள்களுக்கு வேண்டுகோள்

i) செய்திகள், விளம்பரங்களை தனித்தனியாக்கி படிக்க எளிதாக்குதல்

ii) குற்றம் செய்யும் நிருபர்கள் மீது நடவடிக்கை

### 46 நீதிமன்ற வழக்குகள் விரைவாகத் தீர்விற்கு

i) ஆடியோ, வீடியோ முறையைப் பயன்படுத்துதல்

ii) கம்யூட்டர்களின்உபயோகம்

iii) நீதிபதிகளுக்கு வேலைப்பளு குறைதல்

iv) ஊழியர்களுக்கு சிரமம் குறைவு

v) கட்சிக்காரர்களுக்கு திருப்தி

### 47 புத்தகங்கள் சமுதாயத்திற்கு உதவிட புது வழிகள்

i) தனிப்புத்தகங்கள் , கல்விக்கூடங்களில் கட்டாயம்

ii) அன்பளிப்புகளுக்கு பயன்படுத்துதல்

iii) அச்சுத் தொழில் வளர்ச்சி

iv) நல்ல எழுத்தாளர்கள் உருவாக்கம்

v) அறிவு மேம்பட்ட சமுதாயம், மறுமலர்ச்சி

### *48 ஆங்கிலத்தின் பயன்*

i) அயல்நாடுகளில் இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பு

ii) இந்தியப் பொருளாதார உயர்வு

iii) ஆங்கிலத்தால் பயன் அடைந்தவர்கள் சுதந்திர தியாகிகளைப் போற்ற வேண்டியது

### *49 ஆங்கிலத்தை எளிதாக பேச, கற்க*

i) இருபதிற்கும் மேற்பட்ட உபாயங்கள், வழிமுறைகள்

### *50 புதிய நீர்மின்சக்தி மற்றும் வறண்ட பகுதிகளுக்கு நீர் வழங்குதல்*

i) அருவிகள் விழுவதற்கு முன்னரே நீரைத் தடுத்தல்

ii) உயரத்தூண்களில் கால்வாய் வடிவ பாலங்கள்

iii) அவற்றில் ஓடும்நீரைக் கொண்டு டர்பைன்களை சுழல வைத்து மின்சார உற்பத்தி

---

**இந்நூலில் கூறப்பட்டுள்ள திட்டங்கள் மூலமாக உலக முழுவதும் புதிதாக ஏற்பட சாத்தியமுள்ள பல கோடி மனித வேலை வாய்ப்புகள்**

1) வறண்ட ஆறுகளின் குறுக்கே ஆயிரமாயிரம் சிறிய தடுப்புச் சுவர்கள் கட்டுதல், பராமரித்தல். அதன் மூலம் அங்கு உண்டாக்கப் பட்ட ஏரிகளில் தங்கிய நீரின் ஆதாரத்தைக் கொண்டு, மீன் மற்றும் கால்நடை வளர்ப்பு, அப்பகுதியின் அருகில் விவசாயம், இதர தொழில்கள் செய்வது.

2) சாலைகளை நேராக்குதல். இச்சமயங்களில் பெரிய மரங்களை வெட்டி பல வேலைகளுக்குப் பயன்படுத்துதல். அச்சாலையோரங் களில் புதிய மரக்கன்றுகளை வைத்து பராமரிக்க செய்வது.

3) சாலை பாலங்களை அகலப்படுத்துதல்.

4) மின், தொலைபேசி கம்பங்களை நகர்த்துதல்.

5) சாலை நடை மேம்பாலங்களை அமைத்தல்.

6) நகர போக்குவரத்து நெரிசலை சமாளிப்பதற்கு கடைகளில் மாற்றம் செய்தல்

7) நகர பேரூந்துகளில் கூடுதல் இடவசதிக்காக, இருக்கைகளைக் குறைப்பதற்கு அவைகளைக் கழற்றுதல்

8) கட்டாயச் சுற்றுசூழல் திட்டத்தை நிர்வகிக்கும் பணியாளர்கள், அதிகாரிகள்.

9) புதிய வகை குப்பைத் தொட்டிகளை நிர்மானித்தல்.

10) பாலித்தீன் குப்பைகளைக் கையாளுவதற்கு குழிகள் வெட்டுவது, சுவர்கள் கட்டுவது.

11) தொடர் பயன்தரும் செலவில்லாக் கழிவறைகள் அமைப்பது.

12) கையில் கொண்டு செல்லும் கழிப்பறைகளை, தொழிற்சாலை உண்டாக்கி தயாரித்தல், விற்பனை செய்தல்.

13) இலட்சக்கணக்கான இரயில் பயணிகள் பெட்டிகளில் கழிப்பறைக் குழாய்களுக்கு மூடி அமைப்பை பொருத்துதல்.

14) பல ஆயிரம் கி.மீ. சாக்கடைகளுக்கு வலிமையான கான்கிரீட் மூடி போடுதல்.

15) மாவட்டந்தோறும் தொழிற்சாலைகள் அமைத்தல் அவற்றில் பணி புரிதல், உற்பத்தியாகும் பொருட்களை விற்பனை செய்தல்.

16) கிராமங்களில் பூங்கா, மகிழ்விடங்கள், அரசு, தனியார் அலுவலகங்கள், வியாபார நிறுவனங்கள் அமைத்தல்.

17) நகரங்களில் சாலையோர, நடைபாதை குடிசைகளுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

18) தொகுப்பு வீடுகளில் வாழ்வோரின் வாழ்வாதாரத்திற்கு கால்நடைகள் வழங்கி தொழில் செய்ய வைத்தல்.

19) பொது விளம்பர பலகைகள் அமைத்தல்.

20) நகரங்களில் சாமான்கள் பெட்டக வசதி அமைத்தல், நிர்வகித்தல்

21) உலக அதிசய நகரை உருவாக்குதல்.

22) கடல் சீற்றம், சுனாமி பதுகாப்பு உபாயங்களை உருவாக்கி, பராமரித்தல்

23) புதிய ஆடைமுறை அளவுகோள்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் உலகம் முழுவதும் கோடான கோடி புதிய ஆடைகளைத் தயாரிக்கும் நிலைக்காக, துணி உற்பத்தி, அவற்றிற்கான மூலப் பொருள் உற்பத்தி, ஆடை தயாரிப்பு, விற்பனை போன்றவை லட்சக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தரும்.

24) நவீன சுயம்வர அலுவலகங்கள் அமைப்பது, அலுவலர்களை நியமித்தல்.

25) தங்கக் கட்டுப்பாடு செய்தால், அப்போது பாங்கிகளில் மாற்றம் செய்யும் நிலையில் நிறைய பாங்கு ஊழியர்கள் நியமனம், தங்கம் சேர்ப்பின் அபரிமித பொருளாதார நிலையினால் எண்ணற்ற பல தொழில்கள் உருவாகி லட்சக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்புகள்.

26) புத்தகங்கள் படிக்கும் வழக்கம் அதிகமானால், நூல் எழுதுவோர், அச்சிடுவோர், விற்பனை செய்வோர் பெருகும் நிலையில் நல்ல வேலைவாய்ப்பு

27) புதிய முறையில் நீர் மின்விசை, வறண்ட பகுதிகளுக்கு நன்னீர் திருப்புதல், புதிய கான்கிரீட் தூண்கள், கால்வாய் வடிவ பாலங்கள், குழாய்ப்பாதைகள், மின்சார உற்பட்தி சாதன கட்டுமானங்கள், நிர்வாகம், தொடர்ந்த உற்பத்தி

28) இந்நூலில் வராத, பின்னர் வரத்தயாராகிக் கொண்டிருக்கிற பல அற்புதத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் இவ்வுலகில் கோடிக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப் போவது உறுதி.